<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 74/2025</u>

<u>LW : 2 , PW :</u> 6

<u>02.06.2026</u>

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. இராஜேந்திரன் | த / பெ. | திரு. முருகேசன் |
| கிராமம் | : | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | : | உதவி இயக்குநர் (ஓய்வு) | வயது | 64 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி திரு. இராஜேந்திரன் என்பவரை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் திருவாரூர் கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு பெற்று கும்பகோணத்தில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் சரகத்தில் 09.03.2017 ந் தேதியில் உதவி இயக்குநர் கைத்தறி மற்றும் துணி நூல் கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்த வந்தபோது மன்னார்குடி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் இருப்பு குறைவு உள்ளதாக இச்சங்கத்தின் மேலாண்மை இயக்குநர் தனி அறிக்கை எங்கள் அலுவலகத்திற்கு சமர்பித்தார். என்னிடம் காட்டப்படும் அறிக்கை மேலாண்மை இயக்குநர் சமர்பித்த தனி அறிக்கை ஆகும். **19.04.2017 ந் தேதியிட்ட மேலாண்மை இயக்குநர் சமர்பித்த தனி அறிக்கை அ.த.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும், இவர் அறிக்கையில் தெரிவித்துள்ள இருப்பு குறைப்பு மதிப்பு ரூ.16,41,051/- ஆகும். இதனை கூட்டுறவு தணிக்கை துறை அலுவலர் திரு.முருகவேல் உறுதி செய்து அவர் தனி அறிக்கை சமர்ப்பித்தார். என்னிடம் காட்டப்படும் அறிக்கை கூட்டுறவு தணிக்கை துறை அலுவலர் திரு.முருகவேல் சமர்ப்பித்த அறிக்கை ஆகும். அந்த அறிக்கை ஏற்கனவே அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும்,

இதனை உறுதி செய்யும் விதமாக கூட்டுறவு துறை தணிக்கை அலுவலர் திரு. தமிழ்செல்வம் (CAO) அவர்களும் தனது அறிக்கை மூலமாக உறுதி செய்தார். என்னிடம் காட்டப்படும் **கூட்டுறவு துறை தணிக்கை அலுவலர் திரு. தமிழ்செல்வம் (CAO) சமர்ப்பித்த அறிக்கை ஆகும். அந்த அறிக்கை வரிசை எண்.14 அ.த.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இது குறித்து எனது தலைமை அலுவலகமான கைத்தறி இயக்குநர் சென்னை அவர்களுக்கு எனது கடித எண்.ந.க.345/2016/ அ.2 நாள் 28.04.2017 ல் தெரிவிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் **கடிதம் நான் தலைமை அலுவலகமான கைத்தறி இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பிய கடிதம் ஆகும். 28.04.2017 ந் தேதியிட்ட கடிதம் வரிசை எண்.2 அ.த.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இதன் தொடர்ச்சியாக இருப்பு குறைவு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஒரு விசாரணை அலுவலர் நியமனம் செய்ய மேற்கண்ட கடிதத்தில் கோரியுள்ளதற்கு கைத்தறி இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.32627/2017/எச்.2 நாள் 17.05.2017 ன் படி கடலூர் உதவி இயக்குநர் சரகத்தில் பணியாற்றிய திரு. க.வேலாயுதம், துணி நூல் கட்டுப்பாடு அலுவலர் அவர்களை விசாரணை அலுவலராக நியமனம் செய்து ஆணை என்னால் பெறப்பட்டது. என்னிடம் காட்டப்படும் **ஆணை கைத்தறி இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.32627/2017/எச்.2 நாள் 17.05.2017 ஆகும். அந்த அறிக்கை வரிசை எண்.5 அ.த.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்கண்ட திரு.க.வேலாயுதம் அவர்கள் விசாரணையை 3 மாதத்திற்குள் முடிக்க இயலாததால் கைத்தறி இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.32627/2017/எச்.2 நாள் 11.07.2017 ன் படி மேலும் 3 மாதங்களுக்கு விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் **கடிதம் திரு.க.வேலாயுதம் 11.07.2017 அன்று அனுப்பப்பட்ட கடிதம் ஆகும். அந்த கடிதம் வரிசை எண்.6 அ.த.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் கால நீட்டிப்பு ஆணை கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் சென்னை அவர்கள் வழங்கிய ஆணை ஆகும். 18.08.2017 ந் தேதியிட்ட வரிசை எண்.7 ஆணை அ.த.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும், கடலூர் சரகத்திலிருந்து திருவாரூர் சரகத்திற்குட்பட்ட மன்னார்குடி பட்டு நெசவாளர் சங்கத்திற்கு வந்து ஆய்வு மேற்கொள்வதற்கு நிர்வாக காரணங்களால் மேலும் 14 நாட்கள் கால நீட்டிப்பு கோரியுள்ளார். என்னிடம் காட்டப்படும் **கடிதம் 14.11.2017 ந் தேதியிட்ட திரு.க.வேலாயுதம் அனுப்பிய கடிதம்**

**ஆகும். 14.11.2017 ந் தேதிய அனுப்பிய கடிதம் வரிசை எண்.8 அ.த.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இதன் அடிப்படையில் இவர் கோரிக்கை கைத்தறி இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு கைத்தறி இயக்குநர் சென்னை அவர்கள் செயல்முறைகள் ந.க.32627/2016/எச்.2, நாள் 27.11.2017 ல் மேலும் 14 நாட்களுக்கு கால நீட்டிப்பு செயல்முறை ஆணை பெறப்பட்டது. என்னிடம் காட்டப்படும் **ஆணை கைத்தறி இயக்குநர் சென்னை அவர்கள் செயல்முறைகள் ந.க.32627/2016/எச்.2, நாள் 27.11.2017 ஆகும். அந்த ஆணை வரிசை எண்.9 அ.த.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இதன் தொடர்ச்சியாக மன்னார்குடி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் விசாரணை அலுவலர் திரு. க.வேலாயுதம் துணி நூல் கட்டுப்பாட்டு அலுவலர்/விசாரணை அலுவலர் அவர்கள் இருப்பு குறைவு தொடர்பான விரிவான விசாரணை அறிக்கையை சமர்பித்ததனை நான் மாவட்ட குற்றவியல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொடர் நடவடிக்கை வேண்டி எங்களது அலுவலகத்தின் வாயிலாக கோரப்பட்டது. இது குறித்து குற்றவியல் ஆய்வாளர் என்னிடம் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.02 16:59:15 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

**<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>**

**<u>C.C. No. 74/2025</u>**

**<u>LW: 9, PW:7</u>**

**02.06.<u>2026</u>**

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கோவிந்தராஜ் | த / பெ. | திரு. ரெங்கநாதன் |
| கிராமம் | : | மன்னார்குடி | தாலுக்கா | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | 59 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி திரு. கோவிந்தராஜ் என்பவரை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் மன்னார்குடி ஊரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். மன்னார்குடி பட்டு கைத்தறி நெசவாளர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து பின்னர் 09.05.2013 ந் தேதி சங்க தேர்தல் மூலம் சங்க தலைவராக நியமிக்கப்பட்டேன். எனக்கு வரவு செலவு செய்ய காசோலையில் கையொப்பமிட அதிகாரம் கொடுக்கப்பட்டது. நான் இல்லாத சமயத்தில் துணை தலைவர் திருமதி. முருகவள்ளி என்பவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. என்னிடம் காட்டப்படும் தீர்மானம் மேலே குறிப்பிட்ட தீர்மானம் ஆகும். அந்த தீர்மானத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். **வரிசை எண்.20 மன்னார்குடி பட்டு கைத்தறி நெசவாளர் சங்கத்தின் தீர்மானம் புத்தகம் 1 பக்கம் எண்.49, 50 அ.த.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் மற்றும் துணை தலைவர் திருமதி. முருகவள்ளி மற்றும் வேளாண் இயக்குநர் திரு. இராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் வரவுசெலவு சரிப்பார்த்த போது சங்கத்தில் மேலாளர் கோபால் என்பவர் எதுவும் எழுதாமல் பட்டு புடவைகளை விற்பனை செய்து தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொண்டார்.

இதனை துணை இயக்குநருக்கு தெரிவித்தோம். இதன் தொடர்ச்சியாக திரு.சுரேஷ் மேலாண்மை இயக்குநர் என்பவர் 19.04.2016 ந் தேதி கடிதம் மூலம் விசாரணை செய்தார். அதன் பின்னர் 26.07.2016 ந் தேதி தீர்மானம் மூலம் மேலாளர் திரு.கோபால் கவனித்த விற்பனை பிரிவில் எழுத்தர்/பட்டு புடவை தரம் பார்ப்பவர் திரு. காமராஜ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. **வரிசை எண்.21 தீர்மானம் புத்தகம் 2 பக்கம் எண்.129 அ.த.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 31.01.2017 ந் தேதியிட்ட தீர்மானத்தின் மூலம் திரு. கோபால் என்பவரை தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டது. **வரிசை எண்.21 தீர்மானம் 4 ல் புத்தகம் 2 பக்கம் எண்.163 அ.த.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** திரு. கோபால் என்பவர் கையாடல் செய்த தொகையை கட்டுவதாக தெரிவித்து விட்டு தலைமறைவாகிவிட்டார். என்னை குற்றவியல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.02 16:59:25 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்